# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**காமதேனு பல்பொருள் அங்காடி கட்டிட முதல் தளம், 378 அண்ணா சாலை,** தேனாம்பேட்டை, சென்னை–18.
தொலைபேசி 24357580

வழக்கு எண்.25255/விசாரணை/ 2009,

விசாரணை நாள் = 29–1–2010 (இராமநாதபுரம்)

முன்னிலை = முனைவர் (திரு) ஆர். பெருமாள்சாமி,
எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்.டி.,
மாநில தகவல் ஆணையர்

மனுதாரர் = திரு சி. ஈஸ்வரன் , த/பெ. எம். செல்லையா
முனிசிபல் காலனி, போடிநாயக்கனூர்–625 513
தேனி மாவட்டம்

பொது அதிகார அமைப்பு = பொதுத் தகவல் அலுவலர்
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை)
லிமிடெட், தலைமையகம், கோட்டம்–1
பைபாஸ் சாலை, மதுரை–16

========

இன்று (29.1.2010) இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இவ்வாணையத்தால் நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு சி. ஈஸ்வரன், வரவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பில் மதுரை மண்டலம், கோட்டம்.1, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் பொதுத் தகவல் அலுவலரும், துணை மேலாளருமான திரு எஸ். ராமமூர்த்தி, மற்றும் திண்டுக்கல் கோட்ட துணை மேலாளர் திரு பி. கோவிந்தராம் ஆகியோர் வந்திருந்தனர்.

2. தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005ன் சட்டப் பிரிவு 6(1)ன் கீழ், மனுதாரர் 30.4.2009 அன்று பொதுத் தகவல் அலுவலர், கோட்டம்–1, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை.10 என்று முகவரியிட்டு, ஆறு இனங்களுக்குத் தகவல் கோரி விண்ணப்பித்திருந்தார். சட்டப் பிரிவு 7(1)க்குள் 30 நாட்களுக்குள் தகவல் பெறாததால், சட்டப் பிரிவு 19(1)ன் கீழ் 11.6.2009 அன்று முதல் மேல்முறையீடும், சட்டப் பிரிவு 19(3)ன் கீழ் 8.10.2009 அன்று இவ்வாணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீடும் செய்ததன் அடிப்படையில், சட்டப் பிரிவு 18(3)ன் கீழ் இன்று இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் வரவில்லை. விசாரணைக்கு வந்திருந்த பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்களை 14.10.2009 அன்று

வழங்கப்பட்டதாகத் தெரிவித்தார். மனுதாரருக்கு அளிக்கப்பட்ட தகவல்களை பார்வையிட்டபோது, அவை முழுமையாக அளிக்கப்படவில்லையென்று ஆணையம் கருதுகிறது. இந்நிலையில், 30.4.2009 அன்று மனுதாரர் அனுப்பிய மனுவிற்கு இனங்கள் வாரியாக, சரியான, முழுமையான, அரசு ஆவணங்களில் உள்ளபடி தகவல்கள் 5.2.2010க்குள் மனுதாரருக்கு அனுப்பி, மனுதாரரின் கையொப்பம் பெற்ற நகலையும், மனுதாரருக்கு அனுப்பப்பட்ட தகவல்களின் நகலையும், 12.2.2010க்குள் இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.

மாநில தகவல் ஆணையம்

ஒப்புதல் பெறப்பட்ட
நாள் 11 பிப்ரவரி, 2010.

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண்.25255/2009**
**பெறுநர்**
**பொதுத் தகவல் அலுவலர்,**
**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை)**
**லிமிடெட், தலைமையகம், கோட்டம்–1,**
**பைபாஸ் சாலை, மதுரை–16**

**வழக்கு எண். 25255/2009**
**பெறுநர்**
**திரு சி. ஈஸ்வரன் த/பெ. எம். செல்லையா,**
**முனிசிபல் காலனி, போடிநாயக்கனூர்–625 513**
**தேனி மாவட்டம்**